ராணி
காமிக்ஸ்
முகமூடி மாயாவி!
அதிரடி வேட்டை!
கனவுக்
கன்னி
ரூ.5

குழந்தைகள்

செக்கர் வானச் சிவப்பு
சிவந்த ரோஜா விரிப்பு!
சொக்கும் முல்லைச் சிரிப்பு
சொந்த மாக்கும் களிப்பு!

பஞ்சுப் பொதியைப் போலே
பதியும் நெஞ்சில் கால்கள்!
பிஞ்சுக் கைகள் நீட்டும்
பேரின் பத்தின் நூல்கள்!

தத்தித் தவழ்ந்து தாவும்
தவறி விழுந்து கூவும்!
முத்தம் கொடுக்கும் அன்னை
மூக்கைக் கடித்துத் துள்ளும்!

குழலும் யாழும் தோற்கும்
குழைந்து இன்பம் சேர்க்கும்!
மழலை பேசி ஈர்க்கும்
மனித உறவை வார்க்கும்!

அன்பில் மயங்கச் செய்யும்
அமுதும் தேனும் எய்யும்!
இன்பம் இன்பம் பேச்சு
இனிய வாழ்வின் மூச்சு!

—செ.சு. மலரடியான், கள்ளக்குறிச்சி.

ராணி காமிக்ஸ் – 473
(மாதம் இருமுறை இதழ்)

மார்ச்சு 1, 2004.

முகமூடி மாயாவியை மயக்கிய கனவுக் கன்னி

இதோ இந்த மன்னனுக்கு ஒரு மகள் இருந்தாள்.
அவள் நல்ல அழகி. அவ்ளை மணக்க எத்தனை போட்டி!

ஆனால், மாயாவியோ சாதாரண
மண்டை ஓட்டுக் குகையில் வசிப்பவர்!

கடற்கரையில் ஒரு பாழடைந்த மண்டபம்!
காட்டில் புலியும் மானும் நட்புடன் வாழ்ந்தன!
காட்டை அடுத்து ஒரு பாழடைந்த நகரம்.


ஒருநாள் இரவு எல்லோரும் கூடினார்கள்.
தாத்தா! ஒரு கதை சொல்லுங்க!!
காட்டைத் தாண்டி ஒரு நகரம் பாழடைந்து கிடக்கிறதே! அந்தக் கதையைச் சொல்லுங்கள்!
அது ஒரு இளவரசியின் கதை!
இந்தப் பாழடைந்த நகரில்தான் அந்த இளவரசி வாழ்ந்தாள். அவள் பெயர், மின்னல்!
இளவரசியைப் போலவே நகரமும் அழகாக இருந்தது. வில்லோபுரம் என்று பெயர்.

அந்த நகரம் எப்படி அழிந்தது தாத்தா?
இளவரசியின் அழகுதான் அதுக்குக் காரணம்.
அந்தக் கதையைச் சொல்லுங்க, தாத்தா!


வில்லோபுரம் மன்னன், டுன்தூரன்.
மகளே! உனக்குத் திருமணம் செய்து வைக்கப்போகிறேன்.

உன் அழகுக்கு ஏற்ற ஆண்மையுள்ளவன் வேண்டும். அவனைக் கண்டுபிடிக்கப் போட்டி நடத்தப்போகிறேன்!
போட்டியில் இளவரசர்களும், வீரர்களும் கலந்து கொண்டார்கள்.
கடுமையான போட்டிகள்!

முதலில் பாம்புக் குகையைக் கடக்க வேண்டும்!
அடுத்து, காட்டு எருதுகளுடன் மோத வேண்டும்!
அதிலே தப்பினாலும், தப்பமுடியாத ஒரு போட்டி!


சிங்கங்களுடன் போரிட வேண்டும்!
யாராவது தப்பிப் பிழைத்தார்களா?
ஊகூம்! வந்தவர் எல்லோரும் மாண்டார்கள்!

அதனால் ஊர் பெரியவர்கள் அதிர்ச்சி அடைந்தார்கள்.
வீரர்கள் போட்டியிட்டு அழிந்ததால்...
ஊரில் வழிப்பறி, கொலை கொள்ளை பெருகின !
ஊர்ப் பெரியவர்கள் வயிறு எரிந்து சாபமிட்டார்கள்

நகரம்
அழியட்டும் என்று
சபித்தார்கள் !
ஒரு வால்நட்சத்திரம்
தோன்றியது. நகரம்
அழிந்தது !
அழகான நகரம்...
அழிஞ்சுபோச்சு !

வால்நட்சத்திரம் தோன்றினால் ஊர் அழியுமா, தாத்தா?
அப்படித்தான் சொல்லுவாங்க!
நகரம் மீண்டும் தோன்றுமா, தாத்தா?
வேதாளத்தால் தான் அது முடியும்?
யாரு... நம்ம வேதாள மாமாவா?


வேதாளம் கால்பட்டால்,
நகரம் மீண்டும் எழுந்து
நிற்கும்! அழகு பெறும்!!

அரசனும், மகளும்
வேதாளத்துக்காகக்
காத்திருக்கிறார்கள்.

வேதாள மாமா
எப்போ அங்கே
போவார்?

வேதாள மாமாகிட்டேதான் கேட்க வேண்டும்!
?!
மாமா! நீங்கள் போகும்போது எங்களையும் கூட்டிப்போங்க!
இதெல்லாம் வேடிக்கைக் கதை!
நேரமாச்சு. எல்லாம் படுக்கக் கிளம்புங்க!
இன்னும் கதை முடிய வில்லையே!


அப்போது காட்டுக்குள்...
உடனே மாயாவிக்குத் தகவல் கொடுக்க வேண்டும், வாலி!
வா, போவோம், ஒபி!

அவர்கள் மாயாவியைச் சந்தித்தார்கள்.
என்ன ஒபி, இவ்வளவு தூரம்?
நீங்கள்தான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்!

ஒரு புலி ஊருக்குள் புகுந்து, அட்டகாசம் பண்ணுது!
அடக்கி விடலாம், வா!
மாயாவி இரவே கிளம்பினார்!
அழிந்த நகரத்துக்குப் பக்கம்தானே உங்கள் ஊர்?
தாத்தா கதை சொன்னதும், அழிந்த நகரத்துக்குப் போகிறேனே!

நகரம் இருந்தது, உண்மை.
இதோ அழிந்து கிடக்கிறதே!
ஒரு அழகிக்காக ஆயிரம் பேர் உயிர் இழப்பார்களா? எல்லாம் கதை!

ஆச்சரியம்! இன்றும் வால்நட்சத்திரம் தெரிகிறதே! அப்படியானால் தாத்தா சொன்னதெல்லாம் உண்மைதானா?

மாயாவி ஊருக்கு வந்து சேர்ந்தார்.
புலி எங்கே?
இப்ப எங்கோ பதுங்கிவிட்டது!

நேற்று
பார்த்தோம் !

அடித்து
விரட்டினோம்.

ஆனால், இன்று ஒருவனை அடித்துத் தின்றுவிட்டது!
ஒரு மாட்டையும் வேட்டையாடியது!
வீட்டைவிட்டு வெளியே வரவே எங்களுக்குப் பயமாக இருக்கிறது!

இரவு முழுக்கப் புலியோட உறுமல் கேட்குது!

இப்பப் புலி எங்கே?
அழிந்த நகரத்தில் ஒரு புதரிலே பதுங்கியிருக்கு!

ஒரு ஈட்டி கொடு!
ஈட்டி போதாது!


துப்பாக்கி பயன்படுத்தக்கூடாது! முடிந்தால், ஈட்டியைக் காட்டி விரட்ட வேண்டும்!
தனியா போகாதீங்க!

என்னோடு டைகர் வருகிறது !
மாயாவி காட்டுக்குள் பாய்ந்தார் !
எங்காவது பதுங்கியிருக்கும், பார் !

பாழடைந்த நகரை அடைந்தார்கள்!
இதுதான் மூசுத் தாத்தா சொன்ன அரண்மனையா?

புலியைக் காணவில்லையே!


வால்நட்சத்திரம் தவிர வேறு வெளிச்சமே இல்லை!

இடிபாடுகளுக்கு இடையே புலி பதுங்கியிருக்குமோ?

பாழடைந்த அரண்மனை... வால்நட்சத்திரம்... தாத்தா சொன்ன கதை உண்மையோ? சே... சே... முதலில் புலியைத் தேடவேண்டும்!

புலி அங்கேதான் பதுங்கி இருந்தது!


டைகர் பார்த்துவிட்டது!
கொர்...ர்...ர்...


புலி மீது டைகர் பாய்ந்தது!
விடு, டைகர்!

புலி காலால் எட்டி உதைத்தது!
படார்!
மாயாவி மீது பாய்ந்தது!
சொய்ங்!

மாயாவி ஈட்டியால் தடுத்தார்!


ஆனாலும், புலிப் பாய்ச்சலில் தரையில் விழுந்தார்!

ட்டி முறிந்துபோகக் கட்டாரியை எடுத்தார்!
கொர்...


ாழ்வா? சாவா? இருவருக்குமே போராட்டம்!

சதக்...
புலி செத்து விழுந்தது! மாயாவியும்...

திடீர் என்று...
நான் எப்படி இங்கே வந்தேன்?
வீரனே நீ யார்?
உன் வீரம் என்னை மெய்சிலிர்க்க வைத்தது.

நீ யார்?
நீங்கள் யார்?


சந்தேகமில்லை! இவன் ஒற்றனே!

கொண்டுபோய்ச் சிறையில் அடையுங்கள்!
வேண்டாம், அப்பா!
?!


அவரை விட்டுவிடுங்கள் !
விடாதீர்கள் ! கொல்லுங்கள் !!

முகமூடி துப்பாக்கியை எடுத்தார் !
டுமீல் !


துப்பாக்கி ஓசையே கேட்டிராத வீரர்கள்,
அதிர்ச்சி அடைந்தார்கள்!


இப்போதாவது சொல், நீ யார்?
என்னை வேதாளம் என்பார்கள்!

ஆ! வேதாளம்! எனக்கு வாழ்வு தர வந்தவர்!

உங்களுக்காகத்தான் காத்திருந்தேன்!
அய்... வேதாளம் வந்துவிட்டார்!

மகிழ்ச்சியில் ஆடிப் பாடினார்கள்!
அட பைத்தியங்களா
வீரனே வா வா!!
வேதாளமே வா வா!
என் அழகுக்கு ஏற்ற ஒரு வீரன் கிடைப்பானா என்று நான் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தேன்!

என்னை வாழவைக்க நீங்கள் வந்துவிட்டீர்கள்!
உள்ளே வாருங்கள்!
மாயாவிக்குத் தடபுடல் விருந்து!
நம்மை வாழவைக்க வேதாளம் வந்துவிட்டார்!
ஒன்றுமே புரியவில்லையே.

வில்லோபுரத்தின் மன்னன் நான். இவள் என் மகள் மின்னல்!

உங்கள் வருகையால் எங்கள் சாபம் தீர்ந்தது! எங்கள் நகர் புத்துயிர் பெற்றது!!
!!

வேதாளம் சாபம் நீக்கி, இளவரசி மின்னலுக்கு மாலையிடுவார்! பெரியவர்களின் வாக்கு இது!
?!
எனக்கு ஆசையில்லையே!
என்னைப் பார்! என் அழகைப் பார்!!


என் மகளை அடைய இதுவரை ஆயிரம் பேர் உயிர் இழந்திருக்கிறார்கள்!


நான் இளவரசியை மணக்க வரவில்லை!
அவர் மீது மலர் அம்பு பொழியுங்கள்!

முகமூடியை மலர்க்கொடியால் கட்டினார்கள்!
மன்மத ராசா... வா... வா..
ஆளை விடுங்கள்!
தப்ப முடியாது!

இதுதானே இடி முழக்கம் செய்யக்கூடியது!
அதை! கொடு,

எப்படியிருந்தாலும், போட்டியில் வெற்றிபெற்றால்தான் என் மகள் உனக்கு!
அது பூங்கொடி அல்ல! இரும்புக்கம்பி! முறிக்க முடியாது!

போட்டிக்கு
இழுத்துப் போங்கள்!


இப்படி ஆபத்தில்
சிக்கிக்கொண்டேனே!

புலியை வீழ்த்திவிட்டான்!

ஆனால், போட்டியில் வெற்றிபெற முடியாது!

குகை போல
இருக்கிறதே!

பாம்புக் குகை அது!

அப்படியானால், மூசுத் தாத்தா சொன்னது கற்பனைக் கதை இல்லையா?
நச்சுப் பாம்புகள்... கடித்தால் உயிர் போய்விடும்!

தாண்ட முடியுமா?

தாண்டிவிட்டார்!
உயிர் பிழைத்தேன்!

அடுத்து என்ன...
!
ஓ... காட்டெருமை!
?!


ஓரே பாய்ச்சல்!
ஆ... இன்னொன்று!

சரியாக
மாட்டிக்கொண்டான்!
இல்லப்பா!
பிழைத்துவிடுவார்!


ஒரே தாவல்...
ம்...ம்...ம்...


எருதுகள் பாயுது!
அய்யோ...

ஒரு எருது மீது தாவி ஏறினார், மாயாவி!

அடுத்த எருது வெறித்துப் பார்த்தது!
எருது மீது ஏறி நிற்க முடியுமா? தொலைந்தான்!
சீறி வருகிறதே!

மீண்டும் ஒரு தாவல்
சுவரைத் தாண்டினார்!
பிழைத்தேன்!
இன்னும் ஒரு சோதனை இருக்கிறது!
அடுத்து சிங்கமா?

ஆ! இரண்டு சிங்கம்!

புலியைக் கொன்ற வீரனே! சிங்கங்களைப் பந்தாடு!!
உன்னை மணக்க காட்டு விலங்குகளைக் கொல்ல நான் விரும்பவில்லை!

திரும்பிப் பார்!
ஒரு சிங்கம் சீறிப் பாய்ந்தது!
!
முகமூடியும் தயாரானார்!
அய்யோ... பின்னே ஒரு சிங்கம்!
ஓ! வாள் அடியில் சிக்கிக்கொண்டதே!

என்னால் அவர் சாகப் போகிறாரா?
மாயாவி மோதினார்!
!
கொர்...

வேண்டியதுதான்!
சிங்கத்துடன் கட்டிப்புரண்டார்!
வீரனே வா! வந்து இளவரசிக்கு மாலையிடு!!
ஒரு உயிரைக் கொன்றுவிட்டேனே!


தலைசுற்றுதே!
ஏன்... என்னாச்சு... எழுந்திரு வீரனே!


எழுந்துவிட்டார்!

நான் எங்கே இருக்கேன்?
பாழடைந்த நகரத்தில்... புலியைக் கொன்ற இடத்தில்!

யாரு... ஓபியா...


ஆமாம்! ஏதாவது கனவு கண்டீர்களா?

எல்லாம்... எல்லாம் கனவா!
மூசுத் தாத்தா சொன்ன கதை!
என்ன கனவு?
கனவிலே ஒரு கன்னி... இளவரசி!
இளவரசிதான் பூவா பூத்திருக்கிறாள்!
இந்தப் பூவுக்கு மின்னல் என்று பெயர்!

அப்படியானால்... தாத்தா சொன்ன கதை?

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

அடுத்த
காமிக்ஸ்

ஜேம்ஸ்பாண்டு 007ன்
வேட்டையாடும்...

நாக தேவதை

வண ணப்
படக்கதை

சர்வாதிகாரியின் பிடியில் நாகதேவதை!
ஜேம்ஸ்பாண்டு விடுவித்தது எப்படி?

மார்ச்சு 15-ந்தேதி பாருங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை-600 007.

தினத் தந்தி
வழங்கும்
வெள்ளி தோறும்
சிறுவர் தங்கமலர்
★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
★ புராண படக்கதை
★ துப்பறியும் படக்கதை
★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
★ சிறுகதைகள்
★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்
சிறுவர் தங்கமலர்
தினத்தந்தியுடன்
வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்
உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்